செ.வெ.எண்:281 /2025 நாள்: 08.04.2025

சேலம் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தில் கணக்காளர் மற்றும் இரவுக்காவலர் பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

சேலம் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தில் கணக்காளர் மற்றும் இரவுக்காவலர் பணியிடத்திற்கு வெளிக்கொணர்வு முகமையின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சேலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் இயங்கும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தில் 1 கணக்காளர் மற்றும் 1 இரவுக்காவலர் பணியிடத்திற்கு வெளிக்கொணர்வு முகமையின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

கணக்காளர் பதவிக்கு இளங்கலை வணிகவியல் பட்டப்படிப்பு கல்வித்தகுதியாகவும், 1 ஆண்டிற்கு குறைவாகவும் மற்றும் புதியதாக பணியில் சேர்பவர்களுக்கு ரூ.15,000/- வரையிலும், 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.17,000/- வரையிலும், 5 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.20,000/- வரையிலும், 10 ஆண்டிற்கு மேல் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.25,000/- வரையிலும் ஊதியம் வழங்கப்படும்.

இரவுக்காவலர் பதவிக்கு 12 - ம் வகுப்பு தேர்ச்சி கல்வித்தகுதியாகவும், 1 ஆண்டிற்கு குறைவாகவும் மற்றும் புதியதாக பணியில் சேர்பவர்களுக்கு ரூ.10,000/- வரையிலும், 1 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.12,000/- வரையிலும், 5 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.15,000/- வரையிலும், 10 ஆண்டிற்கு மேல் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு ரூ.18,000/- வரையிலும் ஊதியம் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் புதிய கணக்காளர் மற்றும் இரவுக்காவலர் ஒப்பந்த அடிப்படையில் 1 வருடத்திற்கு மட்டும் வெளிப்புற ஆள் சேர்ப்பு நிறுவனம் மூலம் நியமனம் செய்யப்படுவர். மேற்படி, விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ மேலாளர், சூரமங்கலம் நகர்ப்புர வாழ்வாதார மையம், அறை எண்.207, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியரகம், சேலம் என்ற முகவரியில் 15.04.2025- க்குள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem